**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl. Sessions Case No. | : | 21/2023 (Mother Case in S.C.No. 48/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-1** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 17th day of February 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி, 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆகிய 7 மற்றும் 9 எதிரிகள் ஆஜர் ).**

**முதல் விசாரணை**

நான் தளவாய்பாளையம், கோழிப்பண்ணையில் வசித்து வந்து, கொத்தனார் வேலை செய்கிறேன். நான் இந்து, பள்ளர் சாதியை சேர்ந்தவர். எனக்கு இரண்டு மகன்கள். ஒரு மகள். இவ்வழக்கில் இறந்துபோன ரஞ்சித்குமார் எனது இளைய மகன். கடந்த 17.12.2020 அன்று மாலை சுமார் 6.30 மணியளவில் என் மகன் இறந்துவிட்டார் என வான்மதி எனக்கு போன் மூலமாக சொன்னார். நான் உடனடியாக புகளூர் நால்ரோடு, மூலிமங்கலம், A1 காபி ஷாப் அருகே சென்றேன். அங்கு வான்மதி இருந்தார். பின்னர், நானும், அவரும் கரூர், அரசு மருத்துவமனைக்கு சென்றோம். நான் என் மகளுக்கு இடையில் போன் செய்து, அவரை ..........

வரச்சொல்லிவிட்டு, அரசு மருத்துவமனைக்கு சென்று, என் மகனின் பிரேதத்தை பார்த்தேன். பின்னர், அங்கிருந்து வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திற்கு இரவு 10.00 மணிக்கு நான், என் மகள் சுகுணா, வான்மதி ஆகியோருடன் சென்றேன். எனக்கு எழுத, படிக்கத் தெரியாது என்பதால் நான் சொல்ல சொல்ல என் மகள் சுகுணா புகாரை எழுதினார். அந்த புகாரை அவர் படித்துக்காண்பித்தார். அந்த புகாரின் உண்மை நகல் காட்டப்படுவது. அது அ.சா.ஆ.1. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது.

கலையரசன் என்பவருக்கும், என் மகனுக்கும் ஏற்கனவே ஒரு வாரமாக பிரச்சினை நடந்து வந்தது. எலக்ட்ரீசியன் வேலை செய்ததில், பணம் பிரிப்பதில் அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது.

ஆஜர் எதிரி கூல்மணிக்கும், என் மகனுக்கும் ஏற்கனவே பிரச்சினை இருந்தது. ஆஜரில் உள்ள மற்றொரு எதிரி யாரென்று எனக்கு தெரியாது.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## <u>7 மற்றும் 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது பூர்வீகம் திருச்சி, அண்ணாநகர். நான் கரூருக்கு சுமார் ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு வந்து, தளவாய்பாளையம் கோழிப்பண்ணை பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு மூன்று குழந்தைகள். அதில் மூத்தவர் என் மகள் சுகுணா. இறந்துபோன என் மகன் ரஞ்சித்குமார் அவர் விருப்பப்பட்டு, காதல் திருமணம் செய்துக்கொண்டார். அப்போது என் மகள் சுகுணாவிற்கு திருமணம் ஆகவில்லை. என் முதல் மனைவி பெயர் காளியம்மாள். நான் இந்திராணி என்பவரை இரண்டாவதாக திருமணம் .....

செய்துக்கொண்டேன். என் முதல்மனைவிக்கும், எனக்கும் விவாகரத்தாகவில்லை. என் மகன் கரூருக்கு வருவதற்கு முன்பு, திருச்சியில் தனியாக வசித்து வந்தார். எலக்ட்ரீசியன் வேலை செய்வது சம்மந்தமாக அவர் தனியாக படிக்கவில்லை. ரஞ்சித்குமாரின் மனைவி புனிதவள்ளி. என் மகன் இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு, என் மகனை விட்டு, அவரது மனைவி புனிதவள்ளி பிரிந்து சென்றுவிட்டார். என் மகனுக்கும், வான்மதி என்பவருக்கும் தகாத உறவு இருந்த காரணத்தினால்தான், என் மருமகள் புனிதவள்ளி, என் மகனை விட்டு, பிரிந்து சென்றார் என்றால் சரியல்ல. என் மகனுக்கும், வான்மதிக்கும் தகாத உறவு இருந்ததா என்றால் இல்லை. எனக்கும், என் மகனுக்கும் எந்த தொடர்பும் இல்லாமல், நான் தனியாக என் இரண்டாம் மனைவியுடன் வாழ்ந்து வந்தேன் என்றும், அதனால் என் மகனுக்கும், வான்மதிக்கும் உள்ள தகாத உறவு பற்றி எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. எனது செல்போன் எண் வான்மதிக்கு தெரியும். வான்மதியின் செல்போன் எண் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தபோது, எனது செல்போன் எண்ணையும், வான்மதியின் செல்போன் எண்ணையும் கேட்டு எழுதிக்கொண்டனர்.

என் மகன் அவர் இறப்பதற்கு 15 நாட்களுக்கு முன்பு சிறைக்கு சென்றார். என் மகன் திருச்சியில் வசித்து வந்தபோது, அவர் மீது 2 – 3 வழக்குகள் இருந்தன. கூட்டுக்கொள்ளை செய்தார் என என் மகன் மீது வழக்கு உள்ளது என்றால் இல்லை. என் மகன் கூட்டுக்கொள்ளையில் ஈடுபட்டார் என்றும், அதில் பணம் பிரிப்பதில் தகராறு ஏற்பட்டது என்றும், அதன்காரணமாக வழக்கு சம்பவம் நடந்தது என்றும் சொன்னால் சரியல்ல.

வான்மதியின் கணவர் லோகநாதனை எனக்கு தெரியாது. திருச்சியில் என் மகனுக்கு நிறைய எதிரிகள் இருந்தனர் என்றும், அதனால்தான் என் மகன் திருச்சியை விட்டு, கரூருக்கு வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

எனக்கு போன்மூலமாக மாலை 6.00 – 6.30 மணியளவில் என் மகன் இறந்துவிட்டார் என தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்தவுடன் வான்மதியின் வீட்டிற்கு சென்றேன். அங்கு சென்று பார்த்துவிட்டு, சம்பவ இடத்திற்கு வந்து, அதன்பிறகு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என் மகள் சுகுணா இரவு சுமார் 7.00 மணிக்கு அரசு மருத்துவமனைக்கு வந்தார். சம்பவத்தன்று முதன்முதலில் போலீசாரை காவல்நிலையத்தில் வைத்துதான் பார்த்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை இரண்டுமுறை விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது, நான் இந்து, போயர் சாதியை சேர்ந்தவர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக, என் சாதியை மறைத்து, பொய்யாக பட்டியல் சாதியை சேர்ந்தவர் என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மணிகண்டனுக்கும், என் மகனுக்கும் பிரச்சினை இருந்தது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. என் மகன் சொல்லி எனக்கு தெரியும். என் மகன் சொல்லி தெரியும் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், என் மகனுக்கும் உள்ள முன்விரோதம் பற்றி வான்மதி சொல்லியும், எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரிலும் எனக்கு தெரியவந்தது என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரித்தபோது, எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் விவரத்திலிருந்தும், வான்மதி மூலமும் கேட்டு தெரிந்தேன் என்றும், சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், என் மகனுக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றும், என் மகனுக்கும், எதிரி .......

மணிகண்டனுக்கும் பிரச்சினை இருந்தது என்று என் மகன் என்னிடம் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் மகன் எலக்ட்ரீசியன் வேலை பார்க்கவில்லை என்றும், மூலிமங்கலம் பகுதியில் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தார் என்றும், அந்த பகுதியில் பல பெண்களுடன் தவறாக நடந்து வந்தார் என்றும், அதனால் அந்த பகுதியில் என் மகனுக்கு நிறைய எதிரிகள் இருந்தனர் என்றும் சொன்னால் சரியல்ல. என் மகனுக்கும், வான்மதிக்கும் தவறான உறவு இருந்தது என்றும், அதனால் என் மகன் வான்மதியின் கணவரை அடித்து விரட்டி விட்டார் என்றும், அதனால் என் மகனுக்கும், வான்மதிக்கும் முன்விரோதம் இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. என் மகனுக்கும், அவரது மனைவி புனிதவள்ளியின் உறவினருக்கும், குடும்ப பிரச்சினையின் காரணமாக முன்விரோதம் இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. என் மகன் திருச்சியில் வசித்தபோது, பல வழக்குகளில் ஈடுபட்டார் என்றும், அதன்காரணமாக அவருக்கு பல விரோதிகள் இருந்தனர் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, நான் சம்பவம் குறித்து எதுவும் தெரிந்துக்கொள்ளவில்லை என்றும், காவல்நிலையத்திற்கு முதலில் கிடைத்த தகவல் மறைக்கப்பட்டு, என்னிடம் அ.சா.ஆ.1 புகார் பெறப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. என் மகள் அ.சா.ஆ.1 புகாரை எழுதவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl. Sessions Case No. | : | 21/2023 (Mother Case in S.C.No. 48/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-2** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : சுகுணா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 17th day of February 2025.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி, 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆகிய 7 மற்றும் 9 எதிரிகள் ஆஜர் ).**

**முதல் விசாரணை**

நான் கரூர், ஆத்தூர் பிரிவில் வசித்து வந்து, திருச்சியில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 என் அப்பா. இவ்வழக்கில் இறந்துபோன ரஞ்சித்குமார் என் தம்பி. 17.12.2020 அன்று மாலை 6.00 மணிக்கு என் அப்பா எனக்கு போன் செய்து, என் தம்பி ரஞ்சித்குமாரை வெட்டிவிட்டதாகவும், என்னை கரூர், அரசு மருத்துவமனைக்கு வருமாறும் சொன்னார். அதன்படி, நான் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு 6.30 – 7.00 மணியளவில் சென்றேன். அங்கு என் அப்பா, வான்மதி, போலீசார் ஆகியோர் இருந்தனர். என் தம்பியின் பிரேதத்தை சவக்கிடங்கில் வைத்திருந்தனர். .....

என் தம்பியின் பிரேதத்தை அடையாளம் பார்த்து சொல்ல சொன்னார்கள். நான் என் தம்பி என்று சொன்னேன். பின்னர், அங்கிருந்த போலீசார் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திற்கு செல்லுமாறு கூறினார்கள். நானும், என் அப்பாவும், வான்மதியும் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்திற்கு சென்றோம். பின்னர், அங்கு என் அப்பா சொல்ல சொல்ல புகாரை எழுதி, என் அப்பாவிடம் படித்து காண்பித்தேன். பின்னர், அந்த புகாரில் என் அப்பா கையெழுத்து போட்டுக்கொடுத்தார். அந்த புகார் என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 ஆகும். அ.சா.ஆ.1 புகாரை நான் தான் எழுதினேன். புகார் கொடுக்கும்போது இரவு 10.00 மணி இருக்கும்.

எலக்ட்ரீசியன் வேலை சம்மந்தமாக கலையரசனுக்கும், என் தம்பிக்கும் பிரச்சினை இருந்தது என்று என் தம்பி என்னிடம் கூறியிருந்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ சமயத்தில் கரூர், ஆண்டாங்கோவிலில் வசித்து வந்தேன். அங்கிருந்து கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சுமார் 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து, வேலாயுதம்பாளையம் காவல்நிலையம் 5 கிலோ மீட்டருக்கு மேலே உள்ளது. சம்பவ சமயத்தில் நான் வழக்கறிஞராக படித்து கொண்டிருந்தேன். போலீசார் என்னை 2 – 3 முறை விசாரித்தனர். புகாரில், புகாரை எழுதிய நபர் நான்தான் எழுதினேன் என எழுதுவது வழக்கமாகும். போலீசார் என்னை விசாரித்தபோது, புகாரை நான்தான் எழுதினேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எனக்கு இவ்வழக்கு குறித்து என் அப்பா தகவல் தெரிவிக்கவில்லை என்றும், நான் கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும், அ.சா.ஆ.1 புகாரை நான் எழுதவில்லை என்றும், வழக்கிற்கு பின்னிட்டு, புகாரை யார் எழுதியது என்று தெரியாததால், பின்னிட்டு, நான் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்